# மது வரித் திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மது வரி வெகுமதி நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் பிரகாரம் கணக்கீட்டுப் பிழைகளைத் திருத்துதல், சீராக்குதல் மற்றும் தீர்த்தல் பதிவுகளை உள்ளடக்குவதற்கான பிரதான நாட்குறிப்பு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் விற்றுத் தீர்க்கப்பட்ட ‘‘இசுசு டபள் கப்’’ வாகனத்தின் ரூபா 60,067 பெறுமதியானது புத்தகங்களிலிருந்து அகற்றப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதி அப் பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) வாகனங்களின் மேற்பாகத்தை செப்பனிடுவதற்காக செலவிடப்பட்ட ரூபா 652,750 தொகையான செலவினம் மூலதனமாக்கப்படாமல் 2011 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அதனை 2012 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறுமானத் தேய்வுக் கொள்கையின் பிரகாரம் தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 869,902 தொகை பெறுமானத்தேய்வு ஒதுக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் பெறுமானத்தேய்வாக ரூபா 310,762 தொகை மாத்திரம் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் பெறுமானத்தேய்வும் திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கமும் ரூபா 559,140 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவு | புகையிலை வரி அதிகாரச் சட்டத்தின் கீழ், அறவிடப்படும் தண்டப் பணத்தில் 25 சதவீதம் வெகுமதிகளாக செலுத்துவதற்கு உரித்தாவதுடன் இதற்காக அதிகார சட்டத்தின் 17(ii) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சர் பரிந்துரைக்கும் முறைப்படி மது வரி ஆணையாளர் நாயகத்தினது கட்டுபாட்டின் கீழ் பேணப்படும் வெகுமதி நிதியம் ஒன்று நிறுவப்பட வேண்டிய போதிலும் அத்தகைய நிதியம் ஒன்று 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) நிதிப்பிரமாணங்கள் | |
| நி.பி 756 | மீளாய்வாண்டிற்காக ரூபா 22,882,912 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக பௌதீக மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | கணனி, கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப்பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய டீஎம்ஏ/2009/02 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றுநிருபம் | மதுவரி வெகுமதி நிதியத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப்பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 19,769,754 தொகையான தேறிய மிகை ஏற்பட்டிருந்ததுடன் இதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் தேறிய மிகை ரூபா 17,245,710 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,524,044 தொகையான அதிகரிப்பினைக் காட்டியது. முன்னைய ஆண்டுன் ஒப்பீடு செய்த போது நிதியத்தின் ஒட்டு மொத்த பெறுவனவுகள் ரூபா 7,990,488 அதாவது 8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை மிகையின் அதிகரிப்பிற்கு அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 4,793 மதுவரி தொழில்நுட்ப தண்ட சுற்றிவளைப்புக்களிலிருந்து ரூபா 99,161,671 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது 4,597 தொழில்நுட்ப தண்டங்களிலிருந்து ரூபா 93,344,983 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டில் தொழில்நுட்ப தண்டங்களிலிருந்தான வருமானம் ரூபா 5,816,688 தொகை அதாவது 6.2 சதவீதமாகவும், புகையிலை வரி தண்ட ஒட்டுமொத்த வருமானம் ரூபா 2,173,800 தொகை அதாவது 60 சதவீதமாகவும் அதிகரித்துக் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

வினோத விளையாட்டுக்கள் மற்றும் நலன்புரி வேலைகளுக்கு ரூபா 50,000 படியும், துணிச்சலான செயற்பாடுகள் அல்லது விசேட ஏற்றுக்கொள்ளல்கள் செயற்பாடுகளுக்காக ரூபா 200,000 படியும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இம் மொத்த நிதித் தொகையும் செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. 1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 4.5 ஆம் பந்தியின் பிரகாரம் மெச்சல் வேலைகள், துணிச்சலான செயற்பாடுகள் அல்லது விசேட ஏற்றுக்கொள்ளல்களைப் பெறக்கூடிய ஏனைய செயற்பாடுகளுக்கு வெகுமதி நிதியத்திலிருந்து செலுத்தும் முறைமையொன்று 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 கூட்டிணைந்த திட்டம்

நிதியத்தின் நோக்கு மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மது வரி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் கீழான வெகுமதி நிதியம் ஸ்தாபிக்கப்படுதல்.

(இ) சொத்துக் கட்டுப்பாடு